**CC .No.509/2019**
**நாள் – 13.05.2026.**

பு.**சா.1 – திரு. சுரேஷ்குமார் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சாட்சி சத்தியப்பிரமாணத்தின் மூலம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை )**

**(எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார்).**
**(CC No.–508/2019 வழக்கில் குறுக்கு விசாரணை நடவடிக்கைகள் CC No.509/2019 வழக்கிற்கும் ஏற்றுக்கொள்ள கோரப்பட்டு பின்வருமாறு ஏற்றுக்கொள்ளப்பட்டது.)**

இந்த 2 வழக்கு பரிவர்தனை தவிற வேறு பரிவர்தனைகள் எதியுடன் இல்லை என்றால் சரிதான். எனக்கும் எதிரிக்கும் இதை தவிர வியாபார ரீதியாக தொடர்பு உண்டா என்றால் இல்லை. என்னுடைய பெயர் ஆங்கிலத்தில் Sureshkumar என்றால் சரிதான். வழக்கு புகாரில் 2 வது பத்தியில் எதிரி மாப்பவர் என்ற பெயரில் தொழில் செய்வதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.அதை தவிற KB இன்டஸ்ரி என்ற பெயரில் தொழில் செய்து வருகிறார். 2 வழக்குகளிலும் வழக்கு தொகை தலா ரூ.15,00,000 வீதம் 30,00,000 ம் ஆகும். மேற்படி தொகையை 2018 ம் ஆண்டு கொடுக்கும் அளவுக்கு எனக்கு வருமானம் மூலம் இருந்தது என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வருமான வரி ஆவணத்தை தவிற வேறு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். என்னுடைய புகாரிலும், நிருபண வாக்குமூலத்திலும் எதிரி அவ்வபோது பணத்தை வாங்கி திருப்பி செலுத்துவதை வழக்கமாக கொண்டிருந்தார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 21.01.2018 க்கு முன்பு எவ்வளவு கொடுத்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை.அவ்வபோது கொடுத்தேன் திருப்பி செலுத்தியுள்ளார். 2017 ல் இருந்து வரவு செலவு இருந்தது. பு,சா,ஆ,3 ல் காசோலை எண்.108090 ல் பெயர் பகுதியில் T.Surshkumar என உள்ளது என்றால் சரிதான். எனது மகனின் பெயர் அரவிந்த ராம் விக்னேஷ் எனது மனைவி பெயர் மீனாட்சி என்ற ராஜ மீனாட்சி. நானும் எனது மகனும் எதிரி பாலமுருகனும் வியாபாரம் சம்மந்தமாக எந்த வெளிநாடு சென்றோம் என்றால் மாலத்தீவு. இரும்பு பிளேட் ஏற்றுமதிக்காக சென்றோம். துாத்துக்குடி

துறைமுகத்தில் இரும்பு பிளேட்டினை ஏற்றிவிட்டுதான் மாலத்தீவு சென்றோம். அதை திருச்சியில் எங்கு வாங்கினோம் என்றால் என் மகனும், எதிரியும் சென்று வாங்கினார்கள். அதற்கான பகுதி தொகையை என் மனைவியின் திண்டுக்கல் SBI வங்கி , நேருஜி நகர் கிளையில் காசோலை மூலம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் மாலத்தீவு சென்ற ஆண்டு விபரம் ஞாபகம் இல்லை. என்னுடைய கடவு சீட்டில் மேற்படி பதிவு இருக்கும் என்றால் சரிதான். கடவு சீட்டு என்னிடம் உள்ளது என்றால் சரிதான். நான் மாலத்தீவு சென்று வந்த பிறகு வாங்குவோருக்கும் எங்களுக்கும் நேரடி தொடர்பு ஏற்பட்டு நேரடியாக வியாபாரம் செய்து வந்தோம் என்றால் சரியல்ல. ஏற்றுமதி செய்ய வேண்டும் என்றால் அதற்கான உரிமம் பெறவேண்டும் என்றாலும் அது எதிரியின் பெயரில் உள்ளது என்றாலும் எனக்கு தெரியாது என் மகனுக்கும் எதிரிக்கும் தான் வியாபார பரிவர்த்தனை இருந்தது. 2 வழக்குகளிலும் தாக்கல் செய்யப்பட்ட 6 காசோலைகளையும் KB இன்டஸ்ரி க்காக அதன் உரிமையாளர் என்ற அடிப்படையில் கையொப்பம் செய்து வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த 2 வழக்குகளிலும் KB இன்டஸ்ரி நிறுவனத்தை தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை நான் தனிப்பட்ட பாலமுருகன் என்பவருக்கு தான் பணம் கொடுத்தேன். நிறுவன காசோலைகளில் நிறுவனத்தை சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் வழக்கு நிலைக்க தக்கது இல்லை என்றாலும் சரியல்ல. 20.01.2018 ம் தேதி அன்று என்னுடைய கரூர் வைஸ்சியா வங்கி ,RM காலனி கிளையில் பு.சா.ஆ.11 ன் படி அன்றைய தினமே ரூ.10,00,000 செலுத்தப்பட்டு அன்றைய தினமே ரூ.10,00,000 எடுக்கப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். 06.12.2018 ம் தேதி அன்றைய தினமே ரூ.4.5 லட்சம் செலுத்தப்பட்டு வங்கி கணக்கில் இருந்து ரூ.4 லட்சம் எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பிறகு 20.01.2018 முதல் 20.01.2019 வரை எனது வங்கி கணக்கு பரிவர்தனையில் அதிக பட்ச பரிவர்த்தனையாக ரூ.1 லட்சம் கூட இல்லை என்றால் சரிதான். என்னுடைய கணக்கு சேமிப்பு கணக்கு. குறைந்த பட்ச இருப்பு தொகை ரூ.1000/- அந்த தொகைக்கூட மேற்படி காலத்தில் பல

சமயங்களில் என்னுடைய வங்கி கணக்கில் இல்லை என்றால் சரிதான். என்னுடைய பொருளாதார நிலை காட்டுவதற்காக நானே பணம் போட்டு எடுத்து உற்பத்தி செய்த ஆவணம் என்றால் சரியல்ல.

எனக்கு திண்டுக்கல் நேருஜி நகர் SBI வங்கி கிளையில் கணக்கு எண் 33874249899 என்ற கணக்கு சுவாமி அய்யப்பா ரைஸ் மில் என்ற நிறுவனத்திற்காக உரிமையாளர் என்ற அடிப்படையில் உள்ளது என்றால் சரிதான். 07.12.2015ம் தேதி திருச்சி சபி ஸ்டீல் நிறுவனத்திற்கு காசோலை எண். 954754 ரூ.5 லட்சத்திற்கு எதிரிக்காக கொடுத்தேன் என்றால் இல்லை என் மகனிடம் கொடுத்தேன். 07.12.2015ம் தேதி திருச்சி சபி ஸ்டீல் நிறுவனத்திற்கு எனது மனைவி அவருடைய திண்டுக்கல் நேருஜி கிளை காசோலை எண்.499154 ரூ.13 லட்சத்திற்கு எதிரிக்காக கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்கண்டதன் அடிப்படையில் எனக்கும் எதிரிக்கும் வியாபார பரிவர்த்தனை உள்ளது உறுதியாகிறது என்றால் சரியல்ல. எனக்கு ஏற்றுமதிக்கான உரிமம் இல்லை என்றாலும் அதனால் தான் நானும் எதிரியும் வியாபார பரிவர்த்தனையில் இருந்தோம் என்றால் சரியல்ல. எதிரி மாலத்தீவை சேர்ந்த அல் பாஷா பிரைவேட் லிமிடேட் நிறுவனத்தினரை எனக்கு அறிமுகம் படுத்தி வைத்தார் என்றாலும் அதற்கு பிறகு அவரை தவிர்த்து விட்டு நாங்களே நேரடியாக வியாபார பரிவர்த்தனை செய்தோம் என்றால் சரியல்ல. நானும் எதிரியும் வியாபார பரிவர்த்தனையின் போது நெருக்கமாக இருந்தபோது எதிரி அலுவலகத்தில் வைத்திருந்த 6 காசோலைகளை அவருக்கு தெரியாமல் எடுத்து வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் 19.02.2016ம் தேதி எதிரி அவரது வங்கி கணக்கு வைத்துள்ள மேலாளருக்கு 6 காசோலைகளை பணமாக்க வேண்டாம் என குறிப்பிட்டு Stop payment கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு காசோலைகள் 6யும் எதிரி தான் என் முன்பாக நிரப்பினார். பு.சா.ஆ.4 செல்லானை யார் நிரப்பினார்கள் என்றால் நான் தான் நிரப்பினேன். பு.சா.ஆ.3 காசோலைகள் மற்றும் பு.சா.ஆ.4 செல்லானில் உள்ள எண்கள் மற்றும்

எழுத்தால் எழுதப்பட்ட  கையெழுத்துக்கள் ஒன்றாக உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களை கையெழுத்துக்காக நிபுணர் பரிந்துரைக்கு அனுப்ப ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். எதிரி என்னிடம் பெற்ற மொத்த தொகை ரூ.35 லட்சம் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 21.01.2018 ம் தேதி ரூ.10 லட்சம், 10.09.2018 ம் தேதி அன்று ரூ.5 லட்சம், 20.03.2019 ம் தேதி அன்று ரூ.20 லட்சம் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். கடந்த 21.01.2018 அன்று ரூ.10 லட்சம் கொடுக்கும் போது ஆவணம் ஏதும் பெறவில்லை.கடந்த 10.09.2018 ம் தேதி அன்று ரூ.5 லட்சம் கொடுக்கும் போது 04.03..2019 என பின்தேதியிட்டு 3 காசோலைகளை ரூ.15 லட்சத்திற்கு கொடுத்தார். மேற்படி தொகைக்கு வட்டி கேட்கவில்லை. பு.சா.ஆ.8 சட்ட அறிவிப்பில் எதிரியின் எந்த வங்கிக்கிளைக் உரிய காசோலை என குறிப்பிட்டு அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். எனவே மேற்படி சட்ட அறிவிப்பு சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. கடந்த 09.05.2019 ம் தேதி அன்று நான் எதிரிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பிய முகவரியில் எதிரி குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. சட்ட முறைப்படி எதிரிக்கு உரிய வகையில் சட்ட அறிவிப்பு சார்பு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. புசா.ஆ.10 அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ள கையொப்பம் எதிரியின் உடையது இல்லை என்றால் சரியல்ல.  புசா.ஆ.10 அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ள கையொப்பமும் வழக்கு காசோலையில் உள்ள கையொப்பமும் வெவ்வேறு வகையில் உள்ளது என்றால் சரியல்ல.  புசா.ஆ.10 ல் உள்ள கையொப்பம் எதிரியின் உடையது இல்லை என்றாலும் போலியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. புசா.ஆ.12 வருமான வரி அறிக்கை 01.04.2017 முதல் 31.03.2018 வரையிலான காலத்திற்கு உரியது என்றால் சரிதான். 25.03.2019 ம் தேதி காலதாமதமாக அது சமர்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இப்புகார் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பு அதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதில் மதுரை பாலமுருகனுக்கு ரூ.35 லட்சம் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 20.03.2019 ம் தேதி  ரூ.20

லட்சம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் 31.03.2018ம் வரையிலான வருமான வரி கணக்கில் ரூ.35 லட்சம் எவ்வாறு வந்தது என்றால் சாட்சி பதில் அளிக்கவில்லை. பு.சா.ஆ.12 ஆவணம் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கில் தாக்கல் செய்த பு.சா.ஆ.11 நகை அடகு ரசீதுகள் 2021ம் ஆண்டுக்குரிய ரசீதுகள் என்றால் சரிதான். சாட்சி தொடர்ச்சியாக 3 வருடமாக வைத்திருந்தார் எனவும் பழைய ரசீதுகள் வங்கியில் உள்ளது என குறிப்பிடுகிறார். மேற்படி ரசீதுகள் SBI கரூர் டவுன் கிளைக்குரியது என்றால் சரிதான். நான் தவறான ஆவணங்களை நீதிமன்றத்தில் முன் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும் எதிரிக்கும் வியாபார பரிவர்தனையில் இருந்த போது எடுத்து வைத்திருந்த காசோலைகளை அவரை பழி வாங்கவேண்டும் என்பதற்காக தொகையை நானே நிரப்பி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2018 காலகட்டத்தில் ரூ.35 லட்சம் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வருமானம் இல்லை என்றால் சரியல்ல. எதிரி சட்டப்படி எனக்கு செலுத்தவேண்டிய தொகை எதுவும் இல்லை என்றால் சரியல்ல.பழி வாங்கும் நோக்கோடு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் வழக்கு நிலைக்க தக்கது இல்லை என்றாலும் சரியல்ல.

**புகார்தாரர் தரப்பு மறுவிசாரணை**

எதிரி எனக்கு பணம் கொடுக்க வேண்டும் என குறிப்பிட்டும் , காசோலைகள் கொடுத்துள்ளேன் என குறிப்பிட்டும் ஐ.பி நோட்டீஸ் மற்றும் ஐ.பி வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்கிறேன். மேற்படி வழக்கில் எதிரி என்னை 13 வது எதிரியாக சேர்த்துள்ளார். **3 வது கூடுதல் சார்பு நீதிமன்றம் மதுரையில் தாக்கல் செய்யப்பட்ட ஐ.பி நம்பர் 7/2022 வழக்கின் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் நீதிமன்றத்தால் சார்பு செய்யப்பட்ட நகலின் நகல் புசாஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி வழக்கில் எனக்கு தரவேண்டிய தொகை ரூ.15 லட்சம் என குறிப்பிட்டுள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

மேற்படி ஐ.பி வழக்கு போட்ட விபரம் எப்போது தெரிய வந்தது என்றால் கடந்த 2022 மார்ச் மாதம். நான் 2 வழக்குகளையும் கடந்த 2019 ஜீன் மாதம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் பொய் வழக்குகளை தாக்கல் செய்துள்ளதால் அதையும் குறிப்பிட்டு எதிரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 2024ம் ஆண்டு எனது தரப்பில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நிருபண வாக்குமூலங்களில் மேற்படி ஐ.பி வழக்கு பற்றி குறிப்பிட வில்லை என்றால் சரிதான். தேவைப்படும் போது குறிப்பிடலாம் என்று இருந்தேன

திறந்த நீதிமன்றத்தில் என்னால் பதிவு செய்யப்பட்டு நான் மொழிய தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு வாக்குமூலம் கொடுத்தவருக்கு எடுத்துக்காட்டி சரியென அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

S.PACKIARAJ B.Sc.,B.L.

Digitally signed by S.PACKIARAJ B.Sc.,B.L.
Date: 2026.05.13 16:25:00 +0530

Judicial Magistrate No.I
Dindigul.